செ.வெ.எண். 18 நாள்.06.03.2019.

# பத்திரிக்கைச்செய்தி

கரூர் மாவட்டத்தில் பொது விநியோகத்திட்டத்தில் நியாய விலை அங்காடிகள் சம்பந்தமான குறைபாடுகள், குடும்ப அட்டைகளில் பெயர் சேர்த்தல், பெயர் நீக்கல், பெயர் திருத்தம், புதிய குடும்ப அட்டை கோருதல் மற்றும் உணவுப் பொருள் வழங்கல் தொடர்பான பொது மக்களின் குறைகளை களைவதற்கு **மார்ச் 2019–**ஆம் மாதத்திற்கான பொது விநியோகத்திட்ட குறைதீர் நாள் கூட்டம் **09-03-2019–**ஆம் தேதி **கரூர் வட்டத்தில், தோரணக்கல்பட்டி குறுவட்டம், தோரணக்கல்பட்டி, கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், அரவக்குறிச்சி வட்டத்தில், பள்ளப்பட்டி குறு வட்டத்தில், மொடக்கூர் கீழ் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், குளித்தலை வட்டத்தில், தோகைமலை குறுவட்டம், பில்லூார் கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், கிருஷ்ணராயபுரம் வட்டத்தில், சிந்தலவாடி குறுவட்டம், மகாதானபுரம் வடக்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், கடவூர் வட்டத்தில், மைலம்பட்டி குறுவட்டம், வடகம்பாடி கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், மண்மங்கலம் வட்டத்தில், புகளூர் குறுவட்டம், வேட்டமங்கலம் மேற்கு கிராம நிர்வாக அலுவலர் அலுவலகத்திலும், காலை 10.00 மணி முதல் 1.00 மணி வரை சம்பந்தப்பட்ட வட்ட வழங்கல் அலுவலர் தலைமையில் நடைபெறுகிறது.**

எனவே, பொதுமக்கள் மேற்படி குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் கலந்து கொண்டு பொது விநியோகத்திட்டம் தொடர்பான தங்களது குறைகளை தீர்வு செய்து கொள்ளலாம் எனவும், தற்போது பழைய குடும்ப அட்டைகளுக்குப் பதிலாக மின்னனு குடும்ப அட்டைகள் வழங்கப்பட்டு வருவதால் இதுவரை மின்னணு குடும்ப அட்டைகள் பெறாத குடும்ப அட்டைதாரர்கள் இக்கூட்டத்தினைப் பயன்படுத்திக் கொள்ள வேண்டும் எனவும் கரூர் மாவட்ட ஆட்சித்தலைவர் திரு.த.அன்பழகன், இ.ஆ.ப., தெரிவித்துள்ளார்.

வெளியீடு செய்தி மக்கள் தொடர்பு அலுவலர்,கரூர்